



அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திருமங்கலம் பாடிக்குப்பம் பகுதியில் அமைந்துள்ள கோல்டன் ஜூப்ளி அடுக்கு மாடி குடியிருப்பில் வசிக்கும் மக்களுக்கும், கொரட்டூர் கண்ணகி நகர் பகுதி மக்களுக்கும் அன்றாடத் தேவைகளுக்கான மழைக் கால நிவாரணப் பொருட்களை வழங்கினார். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல் உடனிருந்தார்.

# மாங்காடு நகராட்சிப் பகுதிகளில் வடிநீர் கால்வாய் பணிகள்!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆய்வு!

சென்னை, டிச.10-

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், மாங்காடு நகராட்சி பகுதிகளில் உள்ள மழை வடிநீர் கால்வாய்களை நேற்று (09.12.2023) குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கலைச்செல்வி மோகன் ஆகியோர் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்கள்.

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், கெருகம்பாக்கம் ஊராட்சியில் உள்ள மழை வடிநீர் கால்வாய்களை பார்வையிட்டு, மாங்காடு நகராட்சி, மூன்றாம் கட்டளை பகுதிகளில் உள்ள மழை வடிநீர் கால்வாய்களையும் மாண்புமிகு குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்கள்.

இவ் ஆய்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர் செ.வெங்கடேஷ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சா.செல்வகுமார், திருப்பெரும்புதூர் வருவாய் கோட்டாட்சியர் ஐ.சரவணக்கண்ணன், குன்றத்தூர் வட்டாட்சியர், நீர்வளத் துறை அலுவலர்கள், பொதுப்பணித்துறை அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

### தனியார் துறை மற்றும் தொழிற்சாலைகளில்

# இடஒதுக்கீடு கோரி தனிநபர் மசோதா!

## மாநிலங்களவையில் மு.சண்முகம் அறிமுகப்படுத்தினார்!



புதுடெல்லி, டிச. 10-

ஒன்றிய, மாநில அரசின் பொதுத்துறை நிறுவனங்களில் இருப்பதைப் போல வேலைவாய்ப்பிலும் தனியார் துறையில் உள்ள நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் இடஒதுக்கீடு வேண்டும் என்ற தனி நபர் மசோதாவை மாநிலங்களவையில் கழக உறுப்பினர் மு.சண்முகம் அறிமுகப்படுத்தினார்

பொதுத்துறை நிறுவனங்கள் கொஞ்சம் கொஞ்சமாக சுருங்கி வருவதால் அடித்தட்டு மக்கள், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான வேலைவாய்ப்பு மிகவும் அரிதாக உள்ளது. மண்டல் கமிஷன் அறிக்கை 16(4)ன் படி தாழ்த்தப்பட்ட, பிற்படுத் தப்பட்ட மக்களின் பாதுகாப்புக்காக இந்த மசோதா அறிமுகப்படுத்தப்பட்டது.

பெரும்பாலும் தொழிற்துறையில் பொதுத்துறை வங்கி கடனை பெற்று அரசு மூலம் நிலம் மற்றும் இதர சலுகைகளைப் பெற்று குறைந்த செலவில் நிறுவனங்களைத் தொடங்கி பெருத்த லாபங்களையும் சம்பாதித்து வரும் தனியார் துறை நிறுவனங்கள் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பு தருவதை நிராகரித்து வருகின்றார்கள்.

எனவே அரசுத் துறையில் உள்ளது போல அடித்தட்டு மக்களுக்கு இடஒதுக்கீடு அளிக்க வேண்டுமென்ற இந்த தனி நபர் மசோதாவை 08.12.2023 அன்று மாநிலங்களவையில் கழக உறுப்பினர் மு.சண்முகம் அறிமுகப்படுத்தினார். இந்த மசோதாவை அவை ஏற்றுக் கொண்டது.

மோட்டார் வாகன ஓட்டுநர் மற்றும் இதர தொழிலாளர்களுக்கான சமூகப் பாதுகாப்பு திட்டத்திற்கான தனி நபர் மசோதாவை மாநிலங்களவையில் கழக உறுப்பினர் மு.சண்முகம் 8.12.2023 அன்று அறிமுகப்படுத்தினார்.

இந்தியாவில் பொதுவாக சாலைப் போக்குவரத்து நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. அதிலும் குறிப்பாக சரக்குகளைக் கொண்டு செல்லும் லாரிகள், வேன்கள், பொதுமக்களை ஏற்றிச் செல்லும் பேருந்துகள், சுற்றுலா பேருந்துகள், நகரங்களில் பயன்படுத்தப்படும் ஆட்டோ, டாக்ஸி வாகனங்களை ஓட்டுகின்ற ஓட்டுநர்கள் மற்றும் அந்த தொழிலை பராமரித்து வரும் அந்த தொழில் சார்ந்த எண்ணற்ற தொழிலாளர்கள் அமைப்பு சாரா தொழிலாளர்களாக எந்தவித சமூகப் பாதுகாப்பும் இன்றி தவித்து வருகின்றார்கள்.

வாகனங்களை தயார் செய்யும் நிறுவனங்கள் கோடிக் கணக்கில் சம்பாதித்து அதை விற்பனை செய்து வருகின்றார்கள். இந்த வாகனங்களை இயக்க பயன்படும் பெட்ரோல், டீசல், ஆயில் போன்றவற்றை உற்பத்தி செய்யும் ஆயில் நிறுவனங்களும் கோடிக்கணக்கில் சம்பாதிக்கிறார்கள். வாகனங்கள் செல்லும் சாலைகளை பராமரிப்பது என்ற பெயரில் அரசும் ஏராளமான வரிகளை வசூலித்து வருகின்றது. ஆனால் இந்த இயக்கத்தை தொடர்ந்து பசுமையாக கொண்டு செல்லும் ஓட்டுநர்கள் மாத கணக்கில் வாகனங்களை இயக்குவதில் உள்ள இயக்க இடர்ப்பாடுகள், வெகு தூரம் செல்வதால் சரியான உணவு கிடைக்க வகையில்லாதது, ஓய்வெடுப்பதற்காக சாலைகளில் சரியான தங்கும் வசதிகள், கழிப்பறைகள் இல்லாமல் இருப்பது, இதைவிட மாநிலம் விட்டு மாநிலம் செல்லும் பொழுது அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லாமல் இருப்பது, பொதுவாக வாடகை வண்டிகளை இயக்கும் ஓட்டுநர்களையும், அவரை சார்ந்த தொழிலாளர்களையும் சமூகத்தில் ஓர் விரோதியாகப் பார்ப்பதும், காவல்துறையும், மோட்டார் வாகனத் துறையும், போக்குவரத்துத் துறையும் அவர்களை காரணம் இல்லாமல் வஞ்சமாக தண்டிப்பது போன்ற பல்வேறு இன்னல்களில் இருந்து அவர்கள் வாழ்க்கையை நடத்துவதற்கு தக்க பாதுகாப்புடன் கூடிய ஓர் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை, கட்டுமானத் தொழிலாளர்கள் வாரியம் போல் ஒரு வாரியத்தை அமைத்திட ஒன்றிய அரசு அனைத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு இந்த தனி நபர் மசோதாவை அறிமுகப்படுத்தி மு.சண்முகம் எம்.பி. பேசினார்.

இந்த தனி நபர் மசோதாவை மாநிலங்களவை ஏற்றுக் கொண்டது.

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைக்கிறார்!

# சைதை தொகுதியில் வார்டுகள் தோறும் சிறப்பு மெகா மருத்துவ முகாம்கள்!

## கழகத்தினர்களுக்கு பகுதி செயலாளர்கள் இரா.துரைராஜ் – எம்.கிருஷ்ணமூர்த்தி வேண்டுகோள்!

சென்னை, டிச. 10 -

சைதை கிழக்குப் பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ், மேற்குப் பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் அந்தந்த பகுதிக் கழகத்தினருக்கு விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

மிக்ஜாம் புயல் பெரும் மழை வெள்ளம் காரணமாக சைதை தொகுதியில் பல்வேறு இடங்களில் இன்று (10.12.2023 ஞாயிற்றுக்கிழமை ) மருத்துவ முகாம்கள் நடைபெறுகிறது. இதனை மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்து சிறப்பிக்கிறார். இன்று காலை 09.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணிவரை வார்டு வாரியாக கீழ் கண்ட இடங்களில் சிறப்பு மெகா மருத்துவ முகாம் நடைபெறுகிறது

அதன் விவரம் வருமாறு:

168 வது வார்டில் ஈக்காட்டுத் தாங்கல் பூந்தமல்லி சாலையில் உள்ள சென்னை துவக்கப் பள்ளி வளாகத்தில் பில்ரோத் மருத்துவமனை மருத்துவ குழுவினர்கள் பங்கேற்கும் மருத்துவ முகாம் நடைபெறுகிறது

169 வது வார்டு சைதாப்பேட்டை அப்பாவுநகர் பாரதிதாசன் தெரு பகுதியில் ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மருத்துவ குழுவினர்கள் பங்கேற்கும் மருத்துவ முகாம் நடைபெறுகிறது . 170 வது வார்டு கோட்டூர்புரம் சித்ரா நகரில் விநாயகா மருத்துவ கல்லூரி மருத்துவமனை மருத்துவ குழுவினர்கள் பங்கேற்கும் மருத்துவ முகாம் நடைபெறுகிறது

172 வது வார்டு மடுவின் கரை மசூதி காலனி பகுதியில் மெட்வேவ் மருத்துவமனை மருத்துவ குழுவினர்கள் பங்கேற்கும் மருத்துவ முகாம் நடைபெறுகிறது . 139 வது வார்டில் ஜாபர்கான் பேட்டை கங்கை அம்மன் கோயில் தெரு பகுதியில் காவேரி மருத்துவ மனை மருத்துவ குழுவினர்கள் பங்கேற்கும் மருத்துவ முகாம் நடைபெறுகிறது

140 வது வார்டு மேற்கு மாம்பலம் அரங்கநாதன் சுரங்கப்பாதை அருகில் எம்.ஜி.எம். மருத்துவமனை மருத்துவ குழுவினர்கள் பங்கேற்கும் மருத்துவ முகாம் நடைபெறுகிறது

142 வது வார்டு சைதாப்பேட்டை காரணீஸ்வரர் கோயில் அருகில் அப்பல்லோ மருத்துவமனை மருத்துவ குழுவினர்கள் பங்கேற்கும் மருத்துவ முகாம் நடைபெறுகிறது

மேற்கண்டவாறு சைதை தொகுதியில் ஏழு இடங்களில் நடைபெறும் சிறப்பு மெகா மருத்துவ முகாம்களை இன்று 10.12.2023 ஞாயிற்றுக்கிழமை காலை சரியாக 8.30 மணிக்கு சென்னை தெற்கு மாவட்ட செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைக்கிறார். நிகழ்ச்சியில் சைதை தொகுதியில் உள்ள கழக நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பிக்கிறார்கள்

எனவே நமது சைதை கிழக்கு மேற்கு பகுதிகளில் உள்ள கழக நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட மற்றும் பகுதி நிர்வாகிகள், கழக முன்னோடிகள் சார்பு மன்ற நிர்வாகிகள், பாக முகவர்கள் மற்றும் பாக பணியாளர்கள், செயல் வீரர்கள், வீராங்கனைகள் அனைவரும் சம்பந்தப்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களை நேரில் சந்தித்து மருத்துவ முகாமில் பங்கேற்று பயனடைய செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்

இவ்வாறு பகுதிச் செயலாளர்கள் இரா.துரைராஜ், எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி. ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.



மிக்ஜாம் புயல் காரணமாக, பாதிப்புக்குள்ளான வேளச்சேரி, மடிப்பாக்கம், பள்ளிக்கரனைப் பகுதிகளுக்கு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் சென்று பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு நிவாரணப் பொருட்களை, வழங்கினார். இந்தநிகழ்வின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் ச.அம்பேத்குமார், நெடுஞ்சாலைத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப்யாதவ், பொதுப்பணித்துறை முதன்மைச் செயலாளர் பி.சந்திரமோகன், வேளச்சேரி மண்டலப் பொறுப்பாளர் திருமதி.வி.சுப்புலெட்சுமி, நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர்கள் இரா.சந்திரசேகர், பாலமுருகன், முருகேசன், பொதுப்பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி.சத்தியமூர்த்தி, சென்னை மண்டலத் தலைமைப் பொறியாளர் கே.ஆயிரத்தரசு இராஜசேகரன், நெடுஞ்சாலைத்துறை மற்றும் பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர்கள், மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### 20 லாரிகளில் நிவாரணப் பொருட்கள்:

# வேளச்சேரி - மடிப்பாக்கம் - பள்ளிக்கரணையில் விநியோகம்!

## அமைச்சர் எ.வ.வேலு 5-வது நாளாக வழங்கினார்!

சென்னை, டிச.10-

மிக்ஜாம் புயல் காரணமாக, சென்னையில் கன மழை பெய்து பாதிக்கப்பட்ட வேளச்சேரி, மடிப்பாக்கம், பள்ளிக்கரணை ஆகிய பகுதி மக்களுக்கு நிவாரணப் பொருட்களை, 5-வது நாளாக பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று வழங்கினார்.

மிக்ஜாம் புயல் காரணமாக, வரலாறு காணாத அளவில், தொடர்ந்து பெய்த கன மழையினால் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்கள் பெரிதும் பாதிப்படைந்தது. முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலின்படி, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, பாதிப்புக்குள்ளான வேளச்சேரி, மடிப்பாக்கம், பள்ளிக்கரணைப் பகுதிகளுக்குச் சென்று, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை தொடர்ந்து 5வது நாளாக நேற்றும் (9.12.2023) வழங்கினார்.

சென்னை, வேளச்சேரியில், கக்கன் நகர், காந்தி நகர், சசி நகர், ஏரிக்கரை, பவானி நகர், தமிழ்நாடு வீட்டுவசதி காலனி, அம்பேத்கர் நகர், மடிப்பாக்கத்தில், ஸ்ரீநகர், எல்.ஐ.சி.நகர், லட்சுமி நகர் வார்டு188, பாலாஜி நகர், பள்ளிக்கரணையில், வள்ளல் பாரி நகர், பாண்டியன் நகர், பசும்பொன் நகர், ஸ்ரீநகர் வார்டு 190, ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு, அமைச்சர் அவர்கள் நேரடியாகச் சென்று, 1/2 லிட்டர் பால் பாக்கெட் 8000, பிஸ்கெட் 16000, சுவீட் பன் 5000, சேமியா, ரவா500, கோதுமை5500, அரிசி 5கிலோ பேக் 3000, அரிசி 4 கிலோ பேக்500, அரிசி 2 கிலோ பேக் 7500, வாட்டர் பாட்டில் 1000, கைலி 10000, போர்வை 14000, டவல்3800, சேலை1500, நைட்டி3500, குழந்தைகள் துணி500, பாய் 5000 மற்றும் மருந்து பொருட்கள் அடங்கிய தொகுப்பு 9000 ஆகிய நிவாரணப் பொருட்கள், சுமார் 20 லாரிகளில் கொண்டு சென்று அவர் நேரில் வழங்கினார்.

இந்த நிகழ்வின்போது, நெடுஞ்சாலைத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், பொதுப்பணித்துறை முதன்மைச் செயலாளர் பி.சந்திரமோகன் வேளச்சேரி மண்டலப் பொறுப்பாளர் திருமதி.வி.சுப்புலெட்சுமி, நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர்கள் இரா.சந்திரசேகர், பாலமுருகன் மற்றும் முருகேசன், பொதுப்பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி.சத்தியமூர்த்தி, சென்னை மண்டலத் தலைமைப் பொறியாளர் கே.ஆயிரத்தரசு இராஜசேகரன், நெடுஞ்சாலைத் துறை மற்றும் பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர்களும், அலுவலர்களும் உடனிருந்தனர்.

# தபால் அலுவலக மசோதா-துஷ்பிரயோகத்துக்கு வழிவகுக்கும்!

## மாநிலங்களவையில் பி.வில்சன் குற்றச்சாட்டு!



புதுடெல்லி, டிச.10-

இந்திய தபால்கள் மூலம் அனுப்பப்படும் எந்தவித பொருளையும் தேசிய பாதுகாப்பு, பொதுப் பாதுகாப்பு என்கிற பெயரில் தன்னிச்சையாக இடைமறிக்க (திறந்து காணுதல்) அரசுக்கும் அதிகாரிகளுக்கும் கட்டுப்பாடற்ற அதிகாரங்களை புதிய தபால் அலுவலக மசோதா 2023 அனுமதி வழங்குகிறது. இது துஷ்பிரயோகத்துக்கு வழிவகுக்கும் என மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி. பி.வில்சன் குறிப்பிட்டார்.

1898ஆம் ஆண்டின் இந்திய தபால் அலுவலகச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டு இந்திய தபால் அலுவலக மசோதா 2023 மாநிலங்களவையில் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டது. இந்த மசோதா தொடர்பாக நடைபெற்ற விவாதத்தில் தி.மு.க. சார்பில் பி.வில்சன் பேசினார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது:

மத்திய அரசு தற்போது தாக்கல் செய்துள்ள வடிவத்தில் இந்த மசோதாவை நிறைவேற்றும் போது, இது நாட்டின் தபால் நிலையங்கள் மற்றும் அதன் சேவைகளை முடக்குவதற்கு வழி வகுக்கும். இதனால், தபால் சேவைகளில் தனியார் மயமாக்குதலையும் இந்த மசோதா மேலும் ஒரு படி ஊக்குவிக்கும்.

இந்திய தபால் துறைக்கும் தனியார் நிறுவனங்களுக்கும் உள்ள போட்டிகளை ஆய்வு செய்யாமல் இந்த மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது. உலகின் மிகப் பெரிய அஞ்சல் வலையமைப்பான இந்திய அஞ்சல் துறை அலுவலங்கள், நமது நாட்டின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் உள்ளது.

நகர்ப்புற, கிராமப்புற இந்தியாவை இணைக்கும் இந்த தபால் அலுவலங்கள் 1.4 பில்லியன் இந்தியர்களின்அன்றாட வாழ்வில் முக்கியப் பங்கு வகிக்கிறது. இதனுடைய உள்கட்டமைப்பு மேம்பாடுகள், அஞ்சல்கள் மற்றும் பார்சல்களை வரிசைப்படுத்துதல், எளிதான சேவைக்கு புதிய தொழில்நுட்பங்கள் போன்றவை வழங்கப்படாமல் அவசர நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புதிய மசோதாவின் விதிகள் மூலம் ஏற்படும் தாக்கங்கள் அறியப்படவில்லை. இந்த மசோதாவின் 9-ஆவது பிரிவின் கீழ், நாட்டின் பாதுகாப்பு, நட்புறவு நாடுகள், பொது ஒழுங்கு, அவசரநிலை அல்லது பொதுப் பாதுகாப்பு போன்றவற்றின் அடிப்படையில் எந்தவொரு தபால்களையும், பார்சல்களையும் இடைமறிக்கவோ, திறக்கவோ அல்லது தடுத்து வைக்கவோ தபால் அதிகாரிக்கும் மத்திய அரசுக்கும் அதிகாரம் அளிக்கப்படுகிறது. தேசிய பாதுகாப்பு என்கிற பெயரில் இடைமறிக்க, திறக்க அரசுக்கும், அதிகாரிக்கும் கட்டுப்பாடற்ற அதிகாரங்களை வழங்குகிறது. இதில் அதிகாரிகள் பின்பற்ற வேண்டிய நடைமுறை அளவுகோல் எதுவும் இல்லை. இது அரசியலமைப்பில் வழங்கப்பட்ட சலுகைகளை மீறுவதாகும்.

இந்த தனியுரிமை நெறிமுறைகளை உச்சநீதிமன்றம் நிலைநிறுத்தியுள்ளது. இந்திய தபால் சேவைகளைப் பயன்படுத்தும் அனைத்து குடிமக்களின் தனியுரிமை கடுமையாக சமரசம் செய்யப்படுகிறது. இடைமறித்தலின்போது எடுக்கப்படும் உள்ளடக்கத்தின் ரகசியம் காக்கப்பட எந்த விதியும் மசோதாவில் இல்லை. ஒரு மகன் தன் தாய்க்கு எழுதுவான்; ஒரு கணவன் தன் மனைவிக்கு ; அண்ணன் தங்கைக்கு; வாடிக்கையாளர் தனது வழக்குரைஞருக்கு; ஒரு மாநிலத்தின் அமைச்சரவை தகவல் மற்ற துறைகளுக்கு அனுப்பப்பட்டது போன்ற தகவல்களை இடைமறிக்க முடியுமா? சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்படும் தனியுரிமை இது பாதிக்காதா?

பொதுமக்கள் அனுப்பும் எந்தவிதப் பொருள்களுக்கும் பாதுகாப்பு உண்டு. தற்போது இந்த மசோதாவில் (பிரிவு 10) அஞ்சல் அலுவலகத்திற்கான அத்தகைய பொறுப்பிலிருந்தும் விலக்கு அளிக்கிறது. 'குறிப்பாக பொறுப்பு' என்ற சொற்றொடருக்கான விளக்கம் தெளிவற்றதாக உள்ளது.

இதனால், தபால் மூலம் அனுப்பப்படும் பொருள்களின் மதிப்பைக் கருத்தில் கொள்ளவில்லை. சேவையில் ஏதேனும் குறைபாடு ஏற்பட்டால், அந்தக் கட்டணத்தை மட்டும் திரும்பப் பெறுவதற்கான உத்தரவாதம் உள்ளது. இது உண்மையில் துஷ்பிரயோகத்திற்கு வழி வகுக்கும். முந்தைய சட்டத்தில் சிறைத் தண்டனை, அபராதம் விதிக்கப்பட்டது. தற்போதைய புதிய மசோதா முந்தைய சட்டத்தின் விதிகளை நீர்த்துப் போகச் செய்கிறது என்றார் அவர்.



நேற்று (09.12.2023) தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர், சி.வி.கணேசன் சென்னை பெருநகர மாநகராட்சிக்குட்பட்ட 15வது மண்டலம், சோழிங்கநல்லூர் 193,195,196 மற்றும்196A ஆகிய வட்டத்திற்கு உட்பட்ட மக்களுக்கு தலா 1000 எண்ணிக்கையில் போர்வை மற்றும் உணவுப் பொருட்களை அனுப்பி வைத்தார்.